**தருமபுரி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை– திருமதி.மு.ரா.வசந்தி,M.A.,**

ந.க.எண்.581/2025/எப்1 நாள்.06.06.2026.

**பொருள் –** மனைப் பிரிவு – தருமபுரி நகராட்சி – வெள்ளேகவுண்டன்பாளையம் கிராமம், வார்டு–ஏ, பிளாக்–17, நகரளவு எண்.3/2B–ல் 0.41 ஏக்கர் பரப்பளவில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் திட்ட அனுமதி அளிக்கப்பட்டது – நகராட்சியால் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல் – தொடர்பாக.

**பார்வை –**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை நகஎண்.12843/2022/டிபி–2 நாள். 20.10.2022.
2. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி அவர்களின் ந.க.எண்.9CNQKJ2T/2025/TCP நாள் 15.05.2025.
3. தானப்பத்திரம் ஆவணம் எண்.1004/2025 நாள்.28.04.2025.
4. மனுதாரரின் விண்ணப்பம் நாள். 03.06.2025.
5. இந்நகர்மன்றத்தீர்மானம் எண்.126, நாள். 05.06.2026.

* * * *

**உத்திரவு :**

தருமபுரி நகராட்சி வெள்ளேகவுண்டன்பாளையம் கிராமம், வார்டு–ஏ, பிளாக்–17, நகரளவு எண்.3/2B–ல் 0.41 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவாக அமைக்க மனுதாரரின் விண்ணப்பத்தில் அனுமதி கோரப்பட்டதை தொடர்ந்து பார்வை 2–ல் காணும் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி அவர்களின் கடிதத்தில் உத்தேச குடியிருப்பு மனை பிரிவு வரைப்படத்திற்கு SWP/DTCP/DHARMAPURI/LAYOUT APPROVAL NO.44/2025 என எண்ணிடப்பட்டு தொழிற்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பார்வை 3–ல் காணும் தானப்பத்திரம் எண்.1004/2025 நாள்.28.04.2025 மூலம் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பார்வை 4–ல் காணும் மனுதாரரின் விண்ணப்பத்தின்படி உத்தேச மனைப்பிரிவிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை கட்டமைப்பு பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான சான்றும் சமர்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 1-ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி வரிசை எண்.9-ல் மனுதாரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் வடிகால் வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகளை அடுத்த ஐந்து வருடங்களுக்கு அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/மனைப்பிரிவு உரிமையாளரைச்சாரும். மேலும், வரிசை எண்.10-ல் பராமரிப்பு பணிகளுக்கான திரும்ப செலுத்தக்கூடிய வைப்புத்தொகை ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் வசூலிக்கப்படவேண்டும் என்பதால் காப்பு வைப்புதொகை ரூ.1.00 இலட்சமும் மற்றும் மனைப்பிரிவு அனுமதிக்கட்டணம் ரூ.10,000/- மும் நகராட்சிக்கு மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, பார்வை 5-ல் காணும் இந்நகர்மன்றத்தீர்மானத்தில் உத்தேச மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பூங்காவிற்கான பொது ஒதுக்கீடு ஆகியவற்றினை ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கான பின்னேற்பு மற்றும் உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்படுத்தி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

__இணைப்பு:__ மனைப்பிரிவு வரைபடம்.

8/6/26

**ஆணையாளர்,**
**தருமபுரி நகராட்சி.**

8/6/26

__பெறுநர்:-__
திரு.சி. மணி,
த/பெ சின்னசாமி,
3/827,பழனியப்பா நகர்,
மாந்தோப்பு, இலக்கியம்பட்டி,
தருமபுரி.

__நகல்-__

1. சார் பதிவாளர், தருமபுரி.
2. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி.
3. வருவாய் ஆய்வர், தருமபுரி நகராட்சி - மேற்படி மனைப் பிரிவிற்கு உரிய. காலியிட வரி நிர்ணயம் செய்து அறிக்கை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.